விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 பங்குனி 26 ஜ. ஆகிர் 13 இதழ் 55

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 8—4—82

★ போக்லண்ட் விவகாரம்

## ஆர்ஜன்டீனு துருப்புகள் வெளியேற வேண்டுமாம்

லண்டன், ஏப்ரல் 7

போக்லண்ட்தீவுகளிலிருந்து ஆர்ஜன்டீனு துருப்புக்கள் வெளியேறினுல் மட்டுமே அமெரிக்கா சமரச முயற்சிகளை மேற்கொள்ளுமென்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

போக்லண்ட் பிரச்னேக்கு பிரிட்டனே பொறுப்பாளியென்றும், அது உடனடியாக ஆர்ஜன்டீனுவின் இறைமையை அங்கீகரிக்கவேண்டும் என்றும் சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது.

ஆர்ஜன்டீனுவுடன் சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு, முதலில் போக்லண்ட் தீவுகளிலிருந்து ஆர்ஜன்டீனு துப்புக்கள் வாபஸ் பெறப்பட வேண்டுமென்றும், போக்லண்ட்தீவுகள் மீண்டும் பிரிட்டிஷ் நிர்வாகத்தின்கீழ்க்

(8ம் பக்கம் பார்க்க)

# அநுரா-மைத்திரி அணிகளில் உட்பூசல்கள் அதிகரிப்பு!

## கட்சியை அநுரா காட்டிக் கொடுத்துவிட்டாராம்!

### மைத்திரிமீது வழக்குத் தொடர அநுரா ஆலோசனே

(நமது அரசியல் நிருபர்)

இரண்டு பிரிவுகளாகப் பிளவுபட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மூன்று பிரிவுகளாகி; பிளவுபட்ட அணிகளுக்குள் உட்பூசல்கள் தோன்றி, ஆளே ஆள் பகிரங்கமாகக் காட்டிக்கொடுக்கும் அவல நிலேக்கு இன்று தள்ளப்பட்டுள்ளதுடன்; திரு. மைத்திரிபால சேனநாயக்கா மீது திரு. அநுரா பண்டாரநாயக்கா வழக்குத்தொடரும் திருப்புமுனேயும் ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உட்பூசல்கள் சம்பந்தமாக பலமுக்கிய தகவல்கள் அடுத்த வாரம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மைத்திரிபால சேனநாயக்காவின் அகில இலங்கை செயற்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் கட்சியின் தலேமை அலுவலகத்தில் நடைபெற்றபோது நுவரெலியா மஸ்கெலியா 2வது எம். பி. திரு. அநுரா பண்டாரநாயக்கா உட்பட 10 பேரை கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பதவியிலிருந்து இடைநிறுத்திவைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

கடந்தமாதம் 31ம் திகதி நடைபெற்ற செயற்குழுக்கூட்டத்தில் இவர்கள் தவருன முறையில் நடந்து கொண்டதாலேயே இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மைத்திரி அணியினர் அறிவித்துள்ளனர்.

இச்செயற்குழுக் கூட்டத்தில்

(8-ம் பக்கம்பார்க்க)

## தீயசக்திகளுக்குப் பலியாகா தீர்கள்!

### 'அமிர்' எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

'தமிழ் பேசும் மக்களிடையே பாரம்பரியமாக இருந்துவரும் ஒற்றுமையைக் குலேக்கச் சில தீயசக்திகள் முயற்சிக்கின்றன. தமிழ் மக்கள் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது' என்று எதிர்க்கட்சி முதல்வரும், தமிழர் விடுதலேக் கூட்டணிச் செயலாளர்நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

#### நாவஸீர் சாதனே முயற்சி

ஜனுப் பரீத் நஸீரின் 6 வது உலக சாதனேயான நீண்ட நேர சயிக்கிள் ஓட்டத்தை, நேற்றுக்காலே ஏழு மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி வாசலில் திரு. அ. அமிர்தலிங்கம் ஆரம்பித்துவைத்து உரை நிகழ்த்தினுர்.

ஜனுப் பரீத் நஸீர் சைக்கிள் ஓட்ட சாதனேயை ஆரம்பிப்பதற்குமுனனர். திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் யாழ். மாநகராட்சிமன்ற முதல்வர் திரு. இ. விசுவநாதன், யாழ். மாநகராட்சி மன்றஉறுப்பினர்ஜனுப்ஷாகுல் ஹமீட், ஆணேயாளர் திரு. சி. வி. கே. சிவஞானம், ஜனுப் எஸ். எம். சுல்தான் மற்றும் பரீத் நஸீர் உலக சாதனே விளேயாட்டுக்கழகத் தலேவர் ஆசிரியர் ஜனுப் எம். எஸ். அமானுல்லா விசேஷ சேவை அலுவலர்

(8ம் பக்கம் பார்க்க)

## வெள்ளப்பெருக்கு: 500 பேர் பலி!

லண்டன், ஏப். 7

தெற்கு யேமனில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சுமார் 500 பேர் உயிரிழந்தனர்.

பத்தாயிரம் குடும்பங்கள் வீடுகளே இழந்துள்ளன். இந்த வெள்ளப் பெருக்கினுல் 90 கோடி டாலர் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. நிவாரணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (க)

★ ஆர்ஜன்டினு இறக்குமதிப் பொருள்கள்

## பிரிட்டிஷ் அரசாங்கம் தடை விதித்தது!

லண்டன், ஏப். 7

ஆர்ஜன்டீனுவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சகல பொருட்களுக்கும் பிரிட்டிஷ் அரசு நேற்றுப் பூரண தடை விதித்துள்ளது.

ஆர்ஜன்டீனுவின் ஆக்கிரமிப்பை எதிாத்து வர்த்தக ரீதியிலான தடை பற்றி பிரிட்டிஷ் அரசு விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து ஐரோப்பிய பொருளாதாரச் சமூக நாடுகள் ஆராயவிருக்கின்றன.

அதேநேரத்தில் போக்லண்ட் தீவுகள் பிரச்னேக்கு அமைதித் தீர்வு காண்பதற்காக அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்திவருகிறுர்.

போக்லண்ட் பிரச்னேக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டுமென்ற பாதுகாப்புச்சபையின் தீர்மானத்தைப் பிரேஸிலும் ஆதரித்துள்ளது. (க)

## சேமலாபநிதி உறுப்பினருக்கு கணக்கு வைப்புப் புத்தகம்

(கொழும்பு)

சேமலாபநிதியின் உறுப்பினர்களுக்கு இவ்வாண்டு மே மாதம் முதல் சகல விபரங்களேயும் கொண்ட கணக்குவைப்பு புத்தகம் வழங்கப்படவுள்ளது.

இக்கணக்குவைப்பு புத்தகங்கள் முதலில் புதிதாகச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுமென்றும், பின்னர் படிப்படியாக அதன் 26 லட்சம் அங்கத்தவர்களுக்கும் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு அங்கத்தவர்களுக்குமுள்ள கணக்குவிபரங்களும், வட்டி விபரங்களும் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கும்.

வருட இறுதியில் அங்கத்தவர்கள் இப்புத்தகத்தை மத்திய வங்கியிடம் சேர்க்கவேண்டும். அது இப்புத்தகத்தில் மேலும் விபரங்களே சேர்த்துக் கொள்ளும். (வெ)

### 19-ம் திகதி இடைத்தேர்தல்

புதுடில்லி, ஏப். 7

இந்தியாவின் 4 மாநிலங்களுக்கும், 9 பாராளுமன்றஸ்தானங்களுக்குமான இடைத்தேர்தல் அடுத்தமாதம் 19ம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

மேற்குவங்காளம், கேரளம் ஹரியானு, ஹிமாச்சல் ஆகிய நான்கு மாநிலங்களே இடைத்தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களாகும். (வெ)

### மணிவாக்கு

ஒருவன் உலகத்தையெல்லாம் உரிமையாகப் பெற்றாலும் தன் உயிரை இழப்பானேல், அவன் அடையக் கூடிய நன்மையாகாது. — பைபிள்

# நமது நோக்கு

## அச்சத்துக்கு ஆதாரமுண்டா?

கடந்த ஆட்சியின் அந்திய காலத்தில் நடந்தேறிய சர்வாதிகாரச் செயல்கள், இலங்கையின் பாராளுமன்ற ஆட்சிமுறை பற்றிப் பெருஞ்சந்தேகம் ஏற்படுத்தியது உண்மை.

ஆட்சியிலேயே ஏழு வருடங்கள் அமர்ந்திருந்தும் இன்னும் அதனை நீடிக்க எடுத்த பிரயத்தனமும், கடைசி ஆறு மாதங்கள் எவ்வித பாராளுமன்ற ஆட்சிக்கு இடமில்லாமற்போனதும் மக்களின் வெறுப்பைத் தேடிய செயல்கள்.

இதனைத் தினசரி நினைவூட்டி, இதன் அபாயத்தை மக்களுக்கு எடுத்துரைத்தவர் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் இன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள்.

ஐந்துவருட எல்லையைக் கடந்ததும், தம்முடைய எம். பி. பதவியை ராஜினாமாச் செய்து, மீண்டும் தேர்நதெடுக்கப் பட்டவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன. இதனால் அவர் ஒரு மேன்மையான ஜனநாயகவாதியென்று அன்று பேசப்பட்டது.

அதுமட்டுமல்ல ஒவ்வொரு முறையும் ஐ. தே. கட்சி படுதோல்வியடைந்தபோது அக்கட்சியை மீண்டும் கட்டியெழுப்பி வெற்றிக்கு வழிகாட்டியவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன.

இந்தப் பின்னணியில் இன்றைய ஜனாதிபதி இந்த நாட்டை ஜனநாயக கோட்பாட்டிலிருந்து விலகி, பாராளுமன்ற ஆட்சியை— பிரிட்டிஷ் மரபு — முற்றாக நீக்கி ஒரு கட்சி ஆட்சிக்கோ அல்லது சர்வாதிகார ஆட்சிக்கோ வழிகோல முற்படுவாரென்பது சந்தேகத்துக்குரியது.

நாமிந்த அச்சத்தைப் பற்றிக் குறிப்பிடத்தூண்டியது எங்கள்நேற்றைய பத்திரிகையில் வெளிவந்தசெய்தி இது பற்றியதாகையால், வருங்காலத்தில் இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி முறை தொடர்வது சந்தேகமென்று பேராதனைப் பல்கலைக்கழக அரசியல்துறைப் பேராசிரியர் விஸ்வவர்ணபால யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடந்த ஓர் ஆய்வுக்கருத்தரங்கில் கூறியிருப்பதை வாசகர்கள் படித்திருப்பார்கள்.

ஒரு அரசியல்கூட்டத்திலே ஒரு அரசியல்வாதி நடத்திய பிரசாரக்கூட்டம் அல்ல இது; ஒரு கருத்தரங்கில் இடம்பெற்ற ஆய்வுரை; விபரங்களை ஆதாரமாகக் கொண்ட விளக்கம்; அடித்துக்கூறிய முடிவுமல்ல; சிந்தனையைத் தூண்டும் வகையில் சமர்ப்பித்த கருத்துகள். எனவே பேராசிரியர் கிளப்பிய பேரச்சத்தை நாம் சாதாரணமான குறிப்பென்று தட்டிக்கழிக்கமுடியாது.

பேச்சை நேரில்கேட்டவர்கள் அமைதிகுலைந்த நிலையில் குந்திக்கொண்டிருந்து சிந்திக்கும் நிர்ப்பந்தத்துக்குள்ளானவர்.

இந்த ஆட்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் நாட்டை ஆளும் சட்டவாக்க சபையின் முதுகெலும்பைஅகற்றிவிட்டதைத் தெளிவாக விளக்கியிருக்கிறார் பேராசிரியர்.

எவ்வித அரசியல் அனுபவமுமற்ற இளைஞர்கள் பாராளுமன்ற அங்கத்துவம் பெற்றதும், பாரதூரமான சட்டங்கள், எவ்வித கருத்துப் பரிமாறல் இன்றி இரண்டு நாட்களுக்குள்ளேயே சட்டமாவதும், ஜனாதிபதியின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப பிரதம மந்திரி, அமைச்சர்கள், கட்சி அங்கத்தவர்கள் யாவரும் துரிதப்படுவதும், பாராளுமன்ற மரபையும், மதிப்பையும் கெடுத்து விட்டதாக விளக்கியிருக்கிறார் பேராசிரியர்.

பாராளுமன்றத்தில் நடந்தேறிய மிகமோசமான சம்பவம எதாக்கட்சித் தலைவருக்கு எதிராகக் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் 512 பக்கம் கொண்ட ஒரு வெளியீடாக வந்திருக்கும் இந்த விடயத்தில 24 அங்கத்தவர்கள் பேசியதும் 121 பேர் வாக்களித்ததும், பேச்சுக்களின் உக்கிரமும் அமைச்சர் அவையின் தூண்டுதலில் இது நடந்தேறியதும், சாதகமாக வாக்களிக்க கட்டாயபபடுத்தியதும் — இவையெல்லாம் இந்த நாட்டில் முதன் முதல்பாராளுமன்ற வகுப்புவாதத்தைத் தூண்டிவிட்டிருக்கின்றனவென்பது பேச்சாளரின் அசையாத நம்பிக்கை.

நாம் இதனை எவ்வாறு ஆட்சேபிக்க முடியும்? பாராளுமன்ற வகுப்புவாதம் முன்னெப்போதும் இவ்வளவு தூரம் தலைதூக்கியதில்லை என்பதற்கு அன்று தொட்டு இன்று வரைக்கும் தமிழ் மக்கள் அனுபவித்த, அனுபவித்து வரும் பயங்கர வாழ்க்கை சான்றாகும்.

ஜனாதிபதி ஆட்சிமுறை பாராளுமன்றத்தின் மகத்துவத்தைக் கெடுத்து வருவதை மக்கள் அனுமதிக்கமாட்டார்கள்; என்றும் அனுமதிக்கவில்லை; இது எமது நம்பிக்கை.

அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிட்டதுவேறு; சர்வாதிகார அச்சம் வேறு; இலங்கை மக்கள் வாக்காளர் என்ற கோதாவில் வகுப்பு வாதத்திலும் மோசமான சர்வாதிகாரப் போக்கை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள்.

சட்டங்கள் எவையானாலும் தேர்தல்முறை எதுவானாலும், விழிப்புணர்வுள்ள வாக்காளர் திரண்டுவிட்டால், இவ்வித அபாயத்தை விரட்டியடிப்பரென்ற நம்பிக்கை எமக்குண்டு.

வேறும் சில நாடுகளைப் போல், தோல்விகண்ட எதிர்க்கட்சிகள் இங்கு முற்றாக வலிமை இழப்பதில்லை, ஆளுங்கட்சியின் அகங்கார பெரும்பான்மை ஆட்சி— அதுவே அதற்கு யமனாக மாறுவது கடந்தகால அனுபவம்; இந்த யமன் முன்னிலையில் இதனை முறியடிப்பது எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைப்பட்ட எதிர்ப்பு. அது தவிர்க்க முடியாத நிகழ்ச்சியாகலாம்.

## இன்று புனித வியாழன்

# திருவழிபாட்டின் கருத்தினை இன்று நினைவு கூருவோம்!

''பாஸ்கா'' திரிதினத்தின் முதல் நாள் புனித 'வியாழன். இன்றைய திருவழிபாட்டில் நம்முடைய திருமறையின் பாஸ்கா நிகழ்ச்சியின் மூன்று விசுவாச உண்மைகள் கொண்டாடப்படுகின்றன.

★ ஆண்டவர் தமது சிலுவைப்பலியின் நினைவாக திவ்விய நற்கருணையை ஏற்படுத்தியது.

★ மீட்புப் பணியைத் தொடர்ந்து நடத்த அப்போஸ்தலர்களுக்குக் குருத்துவ அதிகாரத்தை அளித்தது,

★ புதிய உடன்படிக்கையின் சாதனமான அன்பின் புதிய கட்டளையை வழங்கியது. ''அன்பின் புதிய கட்டளை'' கிறிஸ்துவ வாழ்வின் அடித்தளம்.

பழைய ஏற்பாட்டில் மோயீசன் கட்டளைகளில் இறைவாக்கினர் போதனைகளில் விளங்கிய அன்பின் கற்பனையாதெதெனில் ''நீ உனக்கு அன்பு செய்வதுபோல் உன் அயலானுக்கும் அன்பு செய்வாயாக என்பதே. சுயஅன்பே பிறரன்புக்கு மேற்கோளாக அமைந்தது. ஆனால் கிறிஸ்து நாமம் அயலானுக்குக் காட்டவேண்டிய அன்பிற்குத்தாம் உலக மக்களுக்குக் காட்டிய அன்பையே மேற்கோளாகத் தருகிறார்.

''நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல் நீங்களும் உங்கள் அயலவரை நேசியுங்கள். உங்களை அன்பு செய்பவர்களை மட்டும் அன்புசெய்தால் நீங்கள் என்ன பெரியகாரியம் செய்கிறீர்கள்..........உங்கள் பகைவரையும் நேசியுங்கள். அப்படியாயின் நீங்கள் என் சீடர்களாக இருப்பீர்கள்''

அன்பு செய்வதென்றால் வேற்றுமை பாராட்டாமல் அனைவரையும் அன்புசெய்வதாகும்; கைம்மாறும் கருதாமல் அன்புசெய்தாகும். இவ்வன்புக் கட்டளையை நினைவுபடுத்திச் செயல்படுத்த தூண்டுகிறது பாதம் கழுவும் சடங்கு.

கிறீஸ்து அன்று தம் சீடர்களின் பாதங்களைக் கழுவியபின் அதன் உட்கருத்தை அவர்களுக்கு விளக்கினார். நான் உங்களுக்குச் செய்தது இன்னதென்று விளங்கிற்றா? ஆண்டவரும் போதகருமாகிய நான் உங்கள் பாதங்களைக் கழுவினேன் என்றால், நீங்கள் ஒருவர் ஒருவருடைய பாதங்களைக் கழுவ வேண்டும். இதுவே அன்பின் புதிய கட்டளை.

### சிலுவைப்பலியின் நினைவு பூசைப்பலி

எவ்வாறு இஸ்ரயேல் மக்கள் அடிமை வாழ்விலிருந்து உரிமை வாழ்வுக்குக் கடந்து வந்ததைக் கொண்டாட ஆட்டைப் பலியாக்கி விருந்து கொண்டாடினரோ. அவ்வாறே கிறிஸ்துவும் தன்னுடைய இறுதிநேரம் வந்ததும் சிலுவைப்பலியின் நினைவாக இரவு உணவு விழாவில் முதற் பூசைப்பலியை நிறைவேற்றினார். நற்கருணையை ஏற்படுத்தினார். இது உண்மையாகவே ஒலி பலி. ''நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகும்போதெல்லாம் ஆண்டவர் வரும்வரையில் அவரது மரணத்தை அறிக்கையிடுகிறீர்கள்'' இது ஒரு அன்பின் விருந்தும்கூட. எனவேதான் நற்கருணையைத் தமது கடைசிவிருந்திலே ஏற்படுத்தினார். ஆண்டவரும் அப்போஸ்தவரும் குடும்பமாக ஒன்றுசேர்ந்தபோது, ஆண்டவர் அப்பத்தை எடுத்து ''இது என் உடல், இதை வாங்கி உண்ணுங்கள் என்று அவர்களை அழைத்தார்.

### புதிய ஏற்பாட்டின் குருத்துவம்

இன்றைய தினத்தில் நம் ஆண்டவர் நற்கருணைப் பலியோடு இன்றியமையாத தொடர்புகொண்ட பெரிய அருஞ்சாதனமாகிய குருத்துவத்தையும் ஏற்படுத்தினா, கிறிஸ்து தாம் நிறைவேற்றிய முதற்பலிப் பூசையை உலகம் எத்திசையிலும் உலகம் முடியும் வரை தொடர்ந்து புதுப்பிக்க இன்று குருத்துவம் என்னும் உன்னத வல்லமையை நிறுவினார். இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' என்ற கட்டளை வழியாக பலிசெலுத்தும் அதிகாரத்தை, அதாவது குருத்துவத்தைத் தமது அப்போஸ்தலர்களுக்கு வழங்கினார். அப்போஸ்தலர்களைப் பின்தொடர்ந்து குருமார்களும் நம் ஆண்டவர் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகத் திருப்பலியை நிறைவேற்றுகிறார்கள்.

இன்றைய திருவழிபாடுகளின் கருத்துக்களை மனதில் நிறுத்திப் பக்தியோடு பங்கெடுப்போம்.

எம். எம். வில்பிறட்

## மக்கள் கருத்து

### கைதடி தச்சந்தோப்பு வீதியின் நிலை

கைதடியையும். தச்சந்தோப்பையும் இணைக்கும் பாதை பல ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்ட நிலையிலேயே இன்றும் காணப்படுகின்றது. போடப்பட்ட நாளிலிருந்து இப்பாதை எந்தவித திருத்தமுமின்றி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இப்பாதையால் போக்குவரத்து செய்வது மிகவும் சிரமதான முறையிலேயே இருக்கின்றது.

தச்சந்தோப்பு, வேலப்பிராய். கோவிலாக்கண்டி. மறவன்புலோ ஆகிய கிராமங்களைச்சேர்ந்த மக்களுக்கு இப்பாதை மிகவும் பிரதானமானதாகும். நாளாந்தம் சுமார் 500க்கும் குறையாத மக்கள் பிரயாணம் செய்யும் இப்பாதை இந்த நிலையில் இருப்பது மிகவும் வேதனைக்குரியதாகும். வாகனங்களில் தற்போது பிரயாணம் செய்ய முடியாத நிலையில் இருக்கும் இப்பாதை தொடர்ந்தும் இந்நிலையில் இருக்குமானால் நாளடைவில் பாதசாரிகளே நடந்து செல்லமுடியாத நிலை வந்துவிடுமோ என்ற பீதி மக்கள்மத்தியில் ஏற்பட்டுள்ளது.

பஸ் போக்குவரத்து அவசியமான இப்பாதையில் அது இல்லாத பட்சத்தில் துவிச்சக்கர வண்டிகளில் செல்லும் பல தொழிலாளர்களும் உத்தியோகத்தர்களும் தாங்கள் சென்றடைய வேண்டிய இடத்திற்கு செல்வதற்கு முன்னர் இப்பாதையில் தங்களது துவிசக்கரவண்டிகளை உருட்டிச் செல்ல வேண்டி ஏற்படுகின்றது. அப்படியில்லையென ஓட முற்பட்டால் காற்றுப்போன நிலையில் துவிச்சக்கரவண்டியை இழுத்துச் செல்லவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது. இப்படியான பரிதாபகரமானநிலையில் தினமும் பலரைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆகையால் இப்பேர்பட்ட அவலநிலை தொடர்ந்தும் தெருப்பாவனையாளர்களுக்கு ஏற்படாதவண்ணம் இருக்க சம்பந்தப்பட்ட பெருந்தெருக்கள் திணைக்கள அதிகாரிகள் ஆவனசெய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

க. சந்திரசேகரம்
செயலாளர்
தச்சந்தோப்பு கிராம அபிவிருத்தி சங்கம்.

# ':நூலகத்தை அழித்தவர்களால் அறிவை அழிக்க முடியாது'

- சி. நாகராசா

(அரியாலை)

''தென்கிழக்காசியாவிலே முதன்மைபெற்று விளங்கிய யாழ்ப்பாணப் பொதுசன நூல் நிலையத்திற்குத் தீயிட்டதன் மூலம் தமிழ்மக்கள் பன்னெடுங்காலமாகத் தேடிப்பாதுகாத்த ஏடுகளையும், நூல்களையும், கலைப்பொக்கிஷங்களையும் அழிக்க முடிந்ததே தவிர தமிழ் மக்களின் அறிவுப்பொக்கிஷங்களை அழிக்கமுடியவில்லை.''

இவ்வாறு யாழ்ப்பாண வாநகர முன்னாள் முதல்வரும் யாழ். அபிவிருத்திசபை உறுப்பினருமான சட்டத்தரணி சி. நாகராசா, அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற திருமதி செல்வராணி தர்மராசாவின் முதலாவது நினைவுதின நூல் அன்பளிப்பு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சனசமூக நிலையத் தலைவர் திரு. ந. இராமநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. நாகராசா தொடர்ந்துபேசுகையில், யாழ். மாநகர முதலாவது முதல்வர் காலஞ்சென்ற சாம். சபாபதியும், யாழ். புனிதர் சம்பத்தரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபர் வண. பிதா லோங் அடிகளாரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அநேக கல்விமான்களும் இணைந்து செயல்பட்டதன் மூலமே இந்த நூல் நிலையத்தை யாழ்ப்பாண மக்கள் பெறமுடிந்ததென்றும், இந்த நூல்நிலையத்தை மீண்டும் திருத்தியமைக்கும் பொறுப்பு தமிழ் மக்களுடையதாகுமென்றும் தெரிவித்தார்.

திருமதி தர்மராசாவின் ஞாபகார்த்தமாக விலைமதிக்கத்தக்க அநேக நூல்களை அவ

(7ம் பக்கம் பார்க்க)

### போக்லண்ட் விவகாரம்

# அமெரிக்க அமைதி முயற்சி வெற்றியளிக்குமா?

வாஷிங்டன், ஏப். 7

போக்லண்ட் பிரச்சனேக்கு வாஷிங்டனில் அமைதிக் தீர்வுகாணும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. அலக்சாண்டர்கேக், பிரிட்டிஷ் தூதுவர், ஆர்ஜன்டைன தூதுவர்களே தனித்தனியே சந்தித்து நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அமைதி தீர்வுகாண்பதற்கு இரு நாடுகளும் உதவி என்று அமெரிக்க வெள்விவகார அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

போக்லண்ட் பிரச்சனேக்கு அமைதித்தீர்வுகாணுமாறு ஏற்கனவே பிரேசில் வெளிவிவகார மந்திரி கேட்டுள்ளார். இது தொடர்பான கடிதமொன்றை அவர் பிரிட்டிஷ் தூதுவரிடம் சமர்ப்பித்துள்ளார்.

இப் பிரச்சனேக்கு கமிஷன் ஒன்றை நியமிப்பதன் மூலம் தீர்வைக் காணுமாறு கொலம்பியா கேட்டுள்ளது.

இதேசமயம், பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சரை ராஜிஞமா செய்யுமாறு எதிர்க் கட்சிகள் விடுத்த கோரிக்கையை அவர் நிராகரித்துள்ளார்.

போக்லண்ட் தீவுகளே மீண்டும் பிரிட்டிஷ் கைப்பற்றுமென்று பிரிட்டிஷ் பிரதமர் உறுப்பினர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

போக்லண்டை நோக்கி போர்க்கப்பல்கள் விரைந்து கொண்டிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்துள்ளார். [க]

## போக்லண்ட் தீவு விரைவில் பிரிட்டிஷ் கைக்கு மாறும்

லண்டன், ஏப். 7

போக்லண்ட் பிரச்னே விசுவரூபமெடுத்திருக்கும் இன்றைய நிலேயில், சகல கட்சிகளும், வேற்றுமைகளே மறந்து ஒற்றுமையாக உதவுமாறு பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொழில் கட்சியினரின் கண்டனத்திற்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே திருமதி தட்சர் மேற்கண்ட வேண்டுகோளே விடுத்தார்.

போக்லண்ட் தீவுகளின் உரிமை மிக விரைவில், பிரிட்டிஷ் கைக்கு மீண்டும் மாறுமென்றும், அதற்கு சகல கட்சிகளின் உதவியும், ஒத்துழைப்பும் தேவையென்றும் அவர் தெரிவித்தார்.

போக்லண்ட் பிரச்னே பிரிட்டிஷ் அரசியல் வானில் பெரும் சூருவளியை ஏற்படுத்தியுள்ளதாக, மக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவதானிகள் தெரிவித்தனர். [க]

காப்புறுதிக்கு
எய்ற்கன் ஸ்பென்ஸ்
நிகரற்ற சேவைக்கு
நெடுங்காலப் புகழ் பெற்ற
நிறுவனம்

106 ஆண்டுகளுக்கும் மேலாக, லண்டன் லொயிட்ஸ்
நிறுவனத்தின் பிரதிநிதிகளாகப் பணியாற்றிய எய்ற்கன் ஸ்பென்ஸ்,
இலங்கையில், காப்புறுதித் துறையின் முன்னேடி.
ஒரு நூற்ருண்டுக்கும் மேற்பட்ட இந்தக் காலத்தில்,
சேவைக்கும் நம்பிக்கைச் சிறப்புக்கும் புகழ் பெற்ற
நிறுவனமாகப் பெயர் பெற்று விட்டோம்.
நேர் நிகரற்ற இந்த அனுபவத்தை, தற்போது,
தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்
பிரதான பிரதிநிதிகள் என்ற முறையில்,
மேலும் சிறப்பாகப் பயன்படுத்துகிறேம்.
எனவே, (ஆயுள், தீ விபத்து, ஆள் விபத்து, மோட்டார்,
கடல் அபாயம். திருட்டு போன்றவைக்கான)
உங்கள் காப்புறுதித் தேவைகள் அனைத்துக்கும்
எம்மை நாடுங்கள். எங்கள் பரம்பரைச் சிறப்பின்
பெருமைக்குரிய நம்பிக்கை வாய்ந்த உன்னத சேவையை,
நாம் உங்களுக்கு வழங்குவோம்.

எய்ற்கன் ஸ்பென்ஸ்...
என்றலே காப்புறுதி!

எய்ற்கன் ஸ்பென்ஸ்
அன்ட் கம்பனீ லிமிட்டெட்
தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பிரதான பிரதிநிதிகள்
315, வக்சோல் வீதி; கொழும்பு 2.
தொலைபேசி: 24604-6. 25400, 23399.

கிளைச் செயலகங்கள்:
கிளேன் இல்லம், 24 கோயில் வீதி, காலி. தொலைபேசி: 09-2083
290, உட் துறைமுக வீதி, திருகோணமலை, தொலைபேசி: திருமலை 453
95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: யாழ்ப்பாணம் 7603

## சி. ஐ. ஏ. நடவடிக்கைகள்

### 'லாஸ்ஏஞ்சல்ஸ்டைம்ஸ்' தகவல்

சான்பிரான்சிஸ்கோ, ஏப், 7

சி. ஐ. ஏ யின் வெளிநாட்டு உளவு நடவடிக்கைகளே றீகன் நிர்வாகம் அதிகரித்துள்ளது என்று ''லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்'' பத்திரிகை எழுதியுள்ளது.

நிக்கரகுவா. ஆப்கானிஸ்தான், ஈரான், கம்பூச்சியா ஆகிய நாடுகளில் இந்த உளவு சேவை தனது இரகசிய நடவடிக்கைகளே தற்போது மேற்கொண்டுள்ளது என்றும் இப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுத் தலேவர்கள் படுகொலே செய்யப்பட்டது, அரசாங்கங்கள் கவிழ்க்கப்பட்டது ஆகியவற்றுடன் அமெரிக்காவுக்கு எவ்வித சம்பந்தமுமில்லே என்று வெள்ளே மாளிகையின் உதவிப்பத்திரிகைச் செயலாளர் திரு. லொறி கூறுகிற போதிலும், உலகடங்கிலும் ரகசிய நடவடிக்கைகளில் அமெரிக்க உளவு நிறுவனம் ஈடுபட்டுள்ளது என்று இப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த இருபதுஆண்டுகளில் சி. ஐ. ஏ. 900 பெரிய உளவு நடவடிக்கைகளிலும் 1000 சிறிய அளவிலான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தது என்றும் இப்பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

## பலஸ்தீன விடுதலே இயக்கம்

### பாரதம் முழு ஆதரவு

புதுடில்லி. ஏப். 7

பலஸ்தீனவிடுதலே இயக்கத்திற்கு ஆதரவுஅளிக்கவேண்டுமென்றும், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கைகளில் அக்கறைஎடுக்கவேண்டுமென்றும், பாரதம் உலகசமுதாயத்தைக் கேட்டுள்ளது.

குவைத்தில் நடைபெற்ற மாநாடொன்றில் பாரதவெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் மேற்கண்டவேண்டுகோளே விடுத்துள்ளார். (க)

## வான்-லொறி விபத்தில் 4 பேர் பலி

சென்னே, ஏப். 7

பெரியார் மாவட்டத்திலுள்ள சத்திய மங்கலத்தில் நடந்த வான், லொறி விபத்தில் 4 யாத்திரிகர்கள் பலியானுர்கள். 7 யாத்திரிகர்கள் காயமடைந்தனர்.

சத்தியமங்கலத்திலுள்ள மாரியம்மன் கோவிலுக்கு வான் ஒன்றில் யாத்திரிகர்கள் சென்று கொண்டிருந்த போதே இவ்விபத்து ஏற்பட்டது. வான் விபத்தில் சிக்கியதால் 3பேர் மரணமானுர்கள். இதன் பின் அவ்விடத்தில் லொறி ஒன்று மோதி வயோதிப மாது ஒருவர் பலியானுர். லொறிச்சாரதி தலேமறைவாகிவிட்டார். பொலிசார் விசாரணே செய்து வருகின்றனர். (க)

## ஜப்பான் பிரதமர் செல்வாக்கு குறைகிறதாம்

டோக்கியோ, ஏப். 7

ஜப்பானிய பிரதமர் திரு. சுசுக்கியின் செல்வாக்கு குறைந்து வருவதாக மதிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது.

தற்போது 37 சத வீதமான மக்களே பிரதமரையும், அவரது கட்சியையும் ஆதரிக்கின்றனர். கடந்த டிசம்பர்மாதத்தில் 48 சத வீதத்தினர் அவரை ஆதரித்தனர். (க)

## குடிசை, சிறுகைத்தொழில் வளர்ச்சி

புதுடில்லி, ஏப். 7

குடிசை, சிறு கைத்தொழில் வளர்ச்சிக்காகவும், பொருட்களே சந்தைப்படுத்துவதற்காகவும் வசதிகள் செய்ய மத்திய அரசு முன்வந்துள்ளதாக மத்திய அரசு தொழில் மந்திரி திரு. என். டி. சிவாரி கூறினுர். (க)

## நிவாரணம் வழங்க ஏற்பாடு

சென்னே, ஏப். 7

கன்னியாகுமரி மாவட்ட வகுப்பு கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க மாவட்ட ஆட்சித் தலேவர் தலேமையில் நிவாரண குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (க)

## இந்து வளர்ச்சி குழு கோரிக்கை

சென்னே, ஏப். 7

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களே பாதுகாக்க வேண்டும் என்று இந்து வளர்ச்சிக் குழு, தமிழ் நாடு முதலமைச்சர் திரு.எம். ஜி. இராமச்சந்திரனிடம் கோரியுள்ளது. (க)

## மலேசியத்தேர்தல்

கோலாலம்பூர், பெப் 7

மலேசியாவில் இம் மாதம் 22ம் திகதி நடைபெறும் மாநில சட்டசபைக்கானதேர்தலில் ஆளும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் பலர் புதிய முகங்களாகவே இருப்பார்கள்.

தற்போதுள்ள அமைச்சர்களில் மூவரும் சட்டமன்ற உறுப்பினர்களில் அரைவாசிப் பேரும் அடுத்த தேர்தலில் வேட்பாளர் பட்டியலில் இடம் பெறமாட்டார்கள்.

13 மாநிலங்களில் 11 மாநிலங்களுக்குஇம்மாதம் 22ம் தேதி தேர்தல் நடைபெறவிருக்கிறது.

பழைய அபேட்சகர்களே நீக்குவதக்கு கூட்டணியிலுள்ள 2 சிறிய கட்சிகள் ஆட்சேபம் தெரிவித்தபோதிலும், இந்த ஆட்சேபத்தை மலேசியப் பிரதமர் நிராகரித்துள்ளார்.

உரியகாலத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்னதாகவே இத் தேர்தல் நடைபெறுகிறது.

154 உறுப்பினர்களேக் கொண்ட சபையில் தற்போது 131 பேர் ஆளும் கட்சி உறுப்பினர்களாக இருக்கின்றுர்கள்.

### சட்டவிரோத

## முகவர் நிலேயங்கள் சிங்கைஅரசு நடவடிக்கை

சிங்கப்பூர், ஏப். 6

சட்டவிரோதமாக செயல்படும் முகவர்நிலேயங்கள்மீது சிங்கப்பூர் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக அறிவிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் வேலேபெற்றுதருவதாகக்கூறி முகவர்நிலேயங்கள் பல வெளிநாட்டவர்களே ஏமாற்றியதனுலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் சட்டவிரோதமாக இயங்கிவந்த தொழில் முகவர்நிலேயமொன்றிற்கு அந்நாட்டு அரசாங்கத்தால் 2 0 அமெரிக்க டாலர் அபராதம் விதிக்கப்பட்டது.

சிங்கப்பூரிலுள்ள முகவர் நிலேயங்கள் அங்கு வேலே வாய்ப்பைப் பெற்று தருவதாகக் கூறி, பல வெளிநாட்டவர்களிடம் தலா 2,000 அமெரிக்க டாலர்களே சட்ட விரோதமாக அறவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [வெ)

## வினைப்பயன் தீர...

[சாவகச்சேரி]

அனுட்டானம் செபம், தியானம் என்பவற்றைப் பயபக்தியோடு நியமமாகச் செய்பவருக்கு வினைப்பயனாக வரும் துன்பங்கள் படிப்படியாகக் குறைந்து ஒழிவதுடன் இம்மை, மறுமை இன்பமும் கிட்டும்.

இவ்வாறு மீசாலை வடக்கு இராமாவில் ஸ்ரீமுருகன் கோவிலில் நடந்த சைவசமய தீட்சை வைபவத்தில் சைவப் புலவர் வித்துவான் கு. வி. மகாலிங்கம் பேசுகையில் கூறினார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. எம். அருணாசலம் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் மாவடிப் பிள்ளையார் கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள் தீட்சையை நடத்தினார்.

ஆசிரியர்கள் ம. அருணாசலம், எஸ். நடராசா ஆகியோரும் பேசினார்கள். [அ]

## மாதிரிக்கிராமமாக தெரிவு

(புலோலி)

ஸ்ரீலங்கா குடும்பத் திட்டச் சங்க யாழ்.மாவட்டக் காரியக் குழுவின் குடும்பத்திட்டச்சங்கத்தின்கீழ் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தும்பளை கிராமசேவை அலுவலர் பிரிவு மாதிரிக்கிராமமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க தும்பளை கிராமசேவை அலுவலர் திரு. வி சேதுநாயகம் 300 குடும்பங்கள் அடங்கிய பருத்தித்துறைநகர சபையின் 6ம் வட்டாரத்தையும் யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபை புலோலி உப அலுவலகப்பகுதிக்குட்பட்ட 11 ம் வட்டாரத்தையும் மாதிரிப் பகுதிகளாகத் தெரிந்தெடுத்துள்ளார். இதற்கென 10பேர் கொண்ட குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## பாடசாலை கட்டடத்துக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயத்திற்கு மாடிக் கட்டிடம் கட்டுவதற்குவட்டுக்கோட்டை எம். பி திரு. தா. திருநாவுக்கரசு இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இரண்டுலட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார். (கு)

## கடத்தல் சேலை பறிமுதல்

(புலோலி)

17, 500 ரூபா பெறுமதியான கடத்தல் சேலைகளை வீடொன்றில் வைத்துப் பருத்தித்துறைப் பொலிசார் கைப்பற்றினர்.

பருத்தித்துறைப் பொலிசாருக்குக்கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு. எஸ். சிற்றம்பலம் தலைமையில் கான்ஸ்டபிள்களானநிமால்ஸ்ரீ அத்துலரத்தின, யாப்பா, அருந்தவராசா ஆகியோர் அடங்கிய பொலிஸ் கோஷ்டி வியாபாரிமூலைக்குச் சென்று அங்குள்ள வீடொன்றிலிருந்த 17, 500 ரூபா பெறுமதியான சேலைகளையும் கைப்பற்றியது. இச்சம்பவம் தொடர்பாக செல்வகுமார் என்ற வாலிபரையும் பொலிசார் கைதுசெய்தனர்.

கைப்பற்றப்பட்ட சேலைகளுடன் கைதுசெய்யப்பட்ட வாலிபர் பொலிசாரினால் வல்வெட்டித்துறை சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டனர் வாலிபர்,மாணவர் என்று சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து 250 ரூபா அபராதம் விதித்த சுங்கப் பகுதியினர் கடத்தல் சேலைகள் முழுவதையும் பறிமுதல் செய்தனர்.


பங்குவழங்குதல் இப்பொழுது நடைபெறுகிறது



Phoenix

# வானுயர்ந்த இலாபம் பெற லங்கா சீமெந்து

அத்திவாரத்திலிருந்து வானளாவும் உயரத்திற்கு சிமெந்தின் தேவை அதிகரித்துள்ளது. கட்டிட நிர்மாண வேலைகள் பெருமளவில் கூடியிருப்பதால் சமாளிக்கமுடியாதளவுக்கு சிமெந்தின் தேவையும் அதிகரித்துள்ளது.

இதனை முழுமையாக உணர்ந்த இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் என்றுமே விற்பனை செய்யக்கூடிய சிமெந்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக லங்கா சிமெந்து லிமிட்டெட்டை ஆரம்பித்துள்ளது.

இந்த முயற்சியில் சேர்ந்து நீங்களும் பெருமளவு இலாபம்பெற போதிய வாய்ப்பிருக்கிறது

ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 1.2 கோடி பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.
பங்கு வழங்குகையின் மொத்த பெறுமதி 30 கோடி ரூபா

முதல் ஆண்டிலேயே பங்கிலாபம் பெறும் வாய்ப்புண்டு

முதலீட்டு நிவாரணமும் வரிச் சலுகைகளும்

- வரிமதிப்பிடற்குரிய வருமானத்தின் 1/3 பகுதிவரை முதலீட்டு நிவாரணம்
- கம்பெனியின் இலாபங்களின் மீது ஐந்து வருட வரி விடுமுறை
- ஐந்து வருடங்களுக்கு பங்கிலாபங்களுக்கு வரி விலக்கு
- வரி விடுமுறைக்குப் பின்னர் குறைந்த வீத வரி மதிப்பு
- வரி விடுமுறைக்குப் பின்னர் பங்கிலாபங்களின் மீதான வரி நிறுத்திவைக்கப்படமாட்டாது
- வதிவு கம்பெனிகள் பெறும் பங்கிலாபங்களுக்கு வரி இல்லை
- மூலதன இலாபங்களுக்கு வரி இல்லை

பங்கு வழங்குதல் மார்ச் 3 முதல் 1982 ஏப்ரல் 30 வரை

முதலீடு செய்வது பற்றிய விபரங்களைத் தரும் முற்பகர்வின் இலவச பிரதிக்கு இங்கு தரப்பட்டுள்ள கூப்பனை அனுப்பி வையுங்கள்.

நிர்வாக ஆலோசனைப் பிரிவு,
இலங்கை வங்கி, 411, காலி வீதி, கொழும்பு - 3

லங்கா சிமெந்து லிமிட்டெட் பங்கு வழங்குகை மீதான முற்பகர்வின் பிரதியொன்றையும் பங்குகளுக்கான ............ விண்ணப்பப் படிவங்களையும் தயவு செய்து அனுப்பி வையுங்கள்.

பெயர் ........................................

முகவரி ........................................

லங்கா சிமெந்து லிமிட்டெட்டுடன் சேர்ந்து உறுதியான எதிர்காலத்தை கட்டியெழுப்புங்கள்

## லங்கா சீமெந்து லிமிட்டெட்

அல்மனார் கட்டிடம், 302, காலி வீதி, கொழும்பு - 4
தொலைபேசி: 589126

கிளிநொச்சி தனிமாவட்டம்;

# இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா?

[பச்சிலைப்பள்ளி]

கிளிநொச்சி தனிமாவட்டக் கோரிக்கை சம்பந்தமாக விசாரணைசெய்த கூட்டணி விசாரணைக்குழு, கூட்டணித் தலைமைப்பீடத்திற்கு இடைக்கால அறிக்கை ஒன்றினைச்சமர்ப்பிப்பதா என்பது பற்றிக் கூடி ஆராயவுள்ளது.

கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி பாராளுமன்றத்தில் கிளப்பிய தனிமாவட்டக் கோரிக்கை சம்பந்தமாக கிளிநொச்சி மக்களின் அபிப்பிராயங்களை அறிய கூட்டணித்தலைமைப்பீடம், விசாரணைக்குழு ஒன்றினை நியமித்திருந்தது.

இவ்விசாரணைக்குழுவில்சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம், பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. த. திருநாவுக்கரசு, யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இவ்விசாரணைக்குழுவில் அங்கம் வகித்த பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கத்தை தவிர, ஏனையோர் கடந்த 20ம் திகதி கிளிநொச்சிக்குச் சென்று, பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளின் சாட்சியங்களைப் பதிவுசெய்தனர்.

இக்குழுவில் அங்கம் வகித்த சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம், ஈராக் அரசாங்கத்தின் அழைப்பை ஏற்றுச் சென்றுள்ளார். அவர் அங்கிருந்து சவூதி அரேபியா நாட்டுக்கும் சென்று பின்பு நைஜீரியாவில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்கமிட்டி மகாநாட்டிலே கலந்துவிட்டே நாடு திரும்புவார்.

எனவே அவர் நாடு திரும்புவதற்கு அதிக நாட்கள் எடுக்கக்கூடுமென்பதால், இடைக்கால அறிக்கைஒன்றினை சமர்ப்பிப்பதா? அல்லது சாவகச்சேரி எம். பி. நாடுதிரும்பிய பின்பு பூரண அறிக்கையை சமர்ப்பிப்பதா? என்பது பற்றி விசாரணைக்குழுவின் ஏனைய அங்கத்தவர்கள்கூடி ஆராயவுள்ளனர் எனத் தெரியவருகிறது. (க)

உலக பௌத்த மகாநாடு

# கொழும்பில் ஜூன்மாதம் நடக்கும்; 24 நாட்டுப் பிரதிநிதிகள் பங்குபற்றுவர்

## விசேட முத்திரை வெளியிடப்படும்

(கொழும்பு)

உலக பௌத்த மாநாடு ஒன்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் ஜூன்மாதம் 5நாள் நடைபெறவிருக்கிறது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இம் மாநாட்டை ஆரம்பித்துவைப்பார் ஜூன் 1ம் திகதி ஆரம்பமாகும் இம் மாநாடு ஜூன் 5ம் திகதி முடிவடையும்.

29 நாடுகளைச் சேர்ந்த பௌத்த தலைவர்கள், கல்விமான்கள், இம் மாநாட்டில் கலந்துகொள்வார்கள்

இந்தியா, மலேசியா, பங்களாதேஷ், அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் பல நாடுகளிலிருந்து பௌத்த பிரதிநிதிகள் இம் மாநாட்டில் கலந்துகொள்வார்கள் என பௌத்தவிவகார ஆணையாளர் தெரிவித்தார்

பங்கொக்கில் கடந்த நவம்பர் மாதம் நடந்த கூட்டமொன்றில் கலாச்சார அமைச்சர் திரு. குருளே உலக பௌத்த மாநாட்டை கூட்டவேண்டுமென ஆலோசனை தெரிவித்திருந்தார்.

இம் மாநாட்டையொட்டி ஞாபகார்த்த முத்திரை ஒன்றும்வெளியிடப்படும் பௌத்த கலைவடிவம் கொண்ட கண்காட்சியும் நடைபெறும். (க)

# "இ. உ. சபைத் தலைவர்களை சமாதான நீதிபதிகளாக்குக"

## அரியாலை மேற்கு சபை கோருகிறது

(அரியாலை)

''கிராமோதய சபைகளின் தலைவர்கள் தத்தமது பகுதிகளில் தமது பதவிக்காலம் வரை சமாதான நீதிபதிகளாகக் கடமையாற்றக்கூடியதாக அவர்களைச் சமாதான நீதிபதிகளாக நியமிக்கவேண்டும்'' என்று நீதி அமைச்சரைக் கோரும் தீர்மானம் அரியாலை மேற்குக் கிராமோதய சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அரியாலை சனசமூக நிலைய மண்டபத்தில் அரியாலைமேற்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. கே.கருணைநாதன் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறிய மற்றும் 21 தீர்மானங்களில் சில வருமாறு:

கொழும்புத்துறை, பாஷையூர், நல்லூர், சுண்டிக்குளி ஆகிய பகுதிகளுக்கு மையமாக இருக்கும் புங்கன்குளம் புகையிரத ஸ்தானத்தில் கடுகதிப் புகையிரதங்கள் தரித்துச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுபோக்குவரத்து அமைச்சரைக் கேட்டுக் கொள்வது.

''அரியாலை கண்டி வீதியில் யாழ்.மாநகர பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தால் அமைத்து நடாத்தப்பட்ட மின்தறி நிலையத்தை மீண்டும் இயங்கச் செய்து, அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

''கிராமங்களில்வாழும் சகல சமூகமத்தியிலும், சமாதானத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தவும், வலுப்படுத்தவும் ஒவ்வொரு கிராமசேவை அலுவலர் பிரிவிலும் அப்பகுதிப் பொலிசாரின் அனுசரணையுடன் சமாதான சபைகள் நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கத்தால் அமைக்கப்படவிருக்கும் ஊர்காவலபடைக்கு அரசியல் கட்சிகளின் தலையீடின்றித் தகுதியும் திறமையும் உடையவர்களை நியமிக்க நடவகைக்கை எடுக்கவேண்டும்.

கிராமோதய சபை சம்பந்தமான கைநூல் எல்லாக் கிராமோதய சபை அங்கத்தவர்களுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென சபையில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் கிராமோதய சபையின செயற் திட்டங்கள் பற்றியும், அதன் செயற்பாடுகள் குறித்தும் கிராமோதய சபையின் செயலாளர் திரு. இ. சண்முகநாதன் சபையில் எடுத்து விளக்கினர். (அ)

'தபால்பை' கொள்ளை

# சந்தேகநபர் அடையாளம் காணப்படவில்லை!

(யாழ்ப்பாணம்)

இ. போ. ச. பஸ்ஸில் கொண்டுசென்ற 'தபால்பை கொள்ளை' சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அடையாள அணிவகுப்புக்குட் படுத்தப்பட்டபோது அடையாளம் காணப்படவில்லை.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நேற்று இவ்வடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

யாழ். நீதிமன்ற பொலிஸ் சார்ஜன்ட் எஸ். மாணிக்கவாசகர் அடையாள அணிவகுப்பிற்கு ஏற்பாடுசெய்திருந்தார்.

81ம் ஆண்டு நவம்பர் 13ம் திகதி காலை யாழ்ப்பாணம் தபால்நிலையத்திலிருந்துதபால்பை வ. போ. சபை பஸ்ஸில் எடுத்துச் செல்லப்பட்டபோது அரியாலையில்வைத்துபஸ்சாரதியையும் நடத்துனரையும் துப்பாக்கி முனையில் இளைஞர்கள் பயமுறுத்தி கொள்ளையடித்தது தெரிந்ததே. அந்த தபால் பைக்குள் 20,060 ரூபா இருந்தது.

இக் கொள்ளை சம்பந்தமாக அரியாலையைச் சேர்ந்த மார்க்கண்டு பாபுகுமார் என்பவரை யாழ். பொலிசார் சந்தேசத்தின் பேரில் கைதுசெய்து யாழ். நீதிமன்ற நீதவான ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர்செய்தபோது றிமாண்டில்வைத்து அடையாள அணிவகுப்பு நடாத்தும்படி உத்தரவிட்டிருந்தார்.

நேற்று அடையாள அணிவகுப்பு நடைபெற்றபோது, பஸ்சாரதி எம். நவரத்தினமும் நடத்துனர் எஸ். நாகேஸ்வரனும் அடையாளம் காண்பிக்கப்படாததால், இன்றுவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (மா)

கவுணாவத்தை வயிரவர்

# ஆலய உயிர்ப்பலி மனு மீண்டும் ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

கீரிமலை கவுணாவத்தை வைரவர் ஆலய உயிர்ப்பலி தொடர்பான மனு மீண்டும் மே மாதம் 19ம் திகதிக்கு ஒத்திதைக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயத்தில் ஆடு, கோழி பலியிடுவதை தடை செய்யக் கூடாதெென காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிசாரிக்கு உத்தரவிட வேண்டுமெனக்கோரி ஆலய முகாமையாளர் ஆறுமுகம் வைத்தீஸ்வரர் மல்லாகம் நீதிமன்றத்தில் இம் மனுவை தொடர்ந்திருந்தார்

இம்மனு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சார்பில் மறுமொழி அணைக்க அவசாசம் கோரப்பட்டது. அத்துடன் பொலிஸ் மா அதிபருக்கும் இன்னமும் அறிவித்தல் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி திரு. மேவின் பெர்ணாண்டோ சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. அ. குமரகுரு அவரிமிடருந்து எவ்வித அறிவித்தலும் கிடைக்காமையால் அவரது சார்பில் மறுமொழி அணைக்க முடியவில்லை எனக்கூறினார்.

இறுதியில் நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் வழக்கின் விசாரணையை மே மாதம் 19ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மனுதார் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம் வி. எஸ். கணேசலிங்கம் திருமதி மோகாந்தி பீரிஸ் ஆகியோர் ஆஜராகினர். (க)

# 11ல் கூடுகிறது

(கரவெட்டி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியசெயற்குழுக் கூட்டம் இம்மாதம் 11ம் திகதி காலை தெல்லிப்பழையில் எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அரிய சந்தர்ப்பம் | Rare Opportunity

CANTABIA INSTITUTE

அளிக்கும்

ஆங்கில வகுப்புகள்

(1) 40 Hour Basic Eng'ish Course,
(2) 50 Hour Week — End English Course
(3) 6 Month Sp ken English Course.

× வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்,
× மாணவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்
× தொழில் புரிவோருக்கு நல்ல வாய்ப்பு
× அச்சிடப்பட்ட பாடக்குறிப்புகள் இலவசமாகக் கொடுக்கப்படும்.

And a Prestigious
(4) 5 Month Higher English Course

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

ஆசிரியர்: கந்தையா நவரேந்திரன்

தொடங்கும் திகதி: 10—4—82

★ விபரங்கட்குத் தொடர்பு கொள்க:

தொலைபேசி: 8201 — 21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இனும்!
இறக்குமதி செய்யப்பட்ட அன்ரெனு மொடல் 503 S
அந்துடன் தொலைக்காட்சி மின்கம்பி (20 யார்)

இச்சலுகை சில தினங்களுக்கு மட்டும்.

அப்பழுக்கற்ற துலக்கமான படங்களுக்கு

கோல்ட் ஸ்டார்
வழங்கும்
பொன்னான சந்தர்ப்பம்

கறுப்பு - வெள்ளைத் தொலைக்காட்சிப் பெட்டிகள்
35 செ.மீ. (14") 43 செ. மீ. (17")



ஏக முகவர்கள்:
பேனேஷியா லிமிட்டெட்.
விற்பனை நிலையங்கள்
கொழும்பு: 172, கேசர் வீதி, கொழும்பு 11 தொலைபேசி: 26598, 22376
திரிகோணமலை: 57, தபால் நிலைய வீதி, திரிகோணமலை
யாழ்ப்பாணம்: 95, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்
மற்றும் நாடெங்கிலுமுள்ள பிரபல விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்
14" - ரூ. 2850/- 17" ரூ. 3500/-
ஒரு வருட உத்தரவாதம்
விற்பனைக்குப் பின் பராமரிப்புச் சேவை.

வெஸ்லி வெள்ளவத்தை
11.4.82 வரை
தினசரி 2.30, 6.15, 9.15
துளசிராம், மஞ்சுபார்கவி
சங்கராபரணம்

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
தங்கத்திலேவைரம்
[புதிய பிரதி]

யாழ்.றீகல்
தினசரி 10—30, 2—15, 4—30 7—00, 9—30
8th and 9th
Bradford Vilman in
PIRANHA
(Horror under water— Color film)
நீருக்கு அடியில் பயங்கரச் சம்பவங்கள் நிறைந்தது



[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணி செல்வி சிவலோஜினி ஜெ. மாணிக்கம் சட்டத்துறையில் மேற்படிப்பை மேற்கொள்ளுவதற்காகச் சமீபத்தில் லண்டன் சென்றுர். இவ்வருடச் சர்வதேசச் சட்டப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுள் ஒரேயொரு தமிழ் மாணவியான இவர் யாழ் வேம்படி மகளிர் பழைய மாணவியுமாவர்.

மனோகரா (யாழ்ப்பாணம்) 10-30, 2-15, 4-45, 7-00, 9-30
FRED WILLIAMSON in
THAT MAN BOLT
Best Karate Film

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 10.30, 2.00, 4.30, 7.00 9.30
Winner of Five Academy Awards
ROBERT DE NERO in
THE DEER HUNTER
(Color-Scope, வயதுவந்தவர்களுக்கு மட்டும்)
Based on the Vietnam War

ராணி (யாழ்.நகர்) தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)
அனேக ரசிகப் பெருமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க புத்தாண்டு வரைக்கும் பறந்துகொண்டிருப்பேன்.

சாந்தி (யாழ்நகர்) 10—30, 2—00, 4—30, 7—15, 9—45
CHRISTOPER PLUMMER — JAMES MASON
MURDER BY DECREE
Suspense—Thrill—Murder (color)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
SOLAMAN KING

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
பச்சைவிளக்கு

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
பெண்குலத்தின் பெருமையை விளக்கும் அற்புதமான வண்ணச் சித்திரம்—ஒவ்வொரு பெண்ணுக்கும் ஓர் ஒப்பற்ற படிப்பினையாக விளங்கும் உன்னத காவியம்—திடீர்த் தீர்மானத்தினுல் திரைப்பட நட்சத்திரத்திற்கு ஏற்பட்ட விபரீத முடிவைக் காணத் தவருதீர்—
ஸ்ரீபிரியா—கமல்— ரஜனி— நாகேஷ்—
நடிகர் திலகம் சிவாஜி மற்றும் பல
முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
★நட்சத்திரம்★

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 26ம் திகதி

வியாழக்கிழமை

(8—4—82)

மேடம்: நண்பர்களுடன் கருத்துவேற்றுமைஉருவாகும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம்.

இடபம்: தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படுகிறது. உற்சாகமான தினம்.

மிதுனம்: வணிகர்களுக்கு வியாபாரம் விருத்தியுண்டு, கல்வித்துறையில் முன்னேற்றம் தென்படும். அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும்.

கடகம்: மக்கள்மூலம்மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும், நற்செய்தி கிடைக்கும்.

சிங்கம்: வாயுக்கோள்என்று உடல் நலத்தைப் பாதிக்கலாம். உணவுவிடயத்தில் சுகாதாரம் வேண்டும். புதிய முதலீட்டை தவிர்த்துக் கொள்ளவும்.

கன்னி; அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும். புதிய கோணத்திலிருந்து தாக்குதல் உருவாகும். நிதானம் வேண்டும்.

துலாம்; புதுவழிகள் மூலம் பணம் கிடைக்கும் குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. ஆதரவு பெருகும். சிறப்பான தினம்.

விருட்சிகம்; நினைத்தது நடக்காது. நிதியில் முடக்கமுண்டு. அதிகசிந்தனை தலையிடியைக் கொடுக்கும். உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

தனு: சகலதுறையிலும் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும். வாகனச்சொந்தக் காரருக்கு அதிக ஆதாயம் உண்டு. நல்ல ஆர்வம் பிறக்கும்.

மகரம்: வாழ்க்கையில் சில முன்னேற்றமான சம்பவம் இடம்பெறும். பொருள் விருத்திக்கு இடமுண்டு. சிறப்பானதினம். தெய்வ அருளும் கிடைக்கும்.

கும்பம்: பணம் பல வழிகளிலும் செலவாகும். அந்நிய நண்பர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். பொருள் நழுவக்கூடும், அவதானம்வேண்டும்.

மீனம்: இன்று எண்ணிய கருமம் இனிமையின் அழைப்பு உங்களுககுக் கிடைக்கலாம். வழமான திருப்பங்கள் ஏற்படலாம். குவிந்திடும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## புதிய தலைநகரில் மின்அபிவிருத்தி

(கொழும்பு)

கோட்டே ஸ்ரீ ஜெயவர்தனபுரத்தில் மின்சார அபிவிருத்திக்கு ஒரு கோடி 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தை வலுவடையச்செய்யவும், விஸ்தரிக்கவும் இந்நிதி பயன்படுத்தப்படவிருக்கிறது. மின்இணைப்புகளும் உபமின்நிலையங்களும் இங்கு அமைக்கப்படும். (க)

## கிராமோதய சபைத்தலைவர்

[யாழ்ப்பாணம்]

மருதங்கேணி கிராமோதய சபையின் தலைவராக மருதங்கேணிப்பாவனையாளர் சங்கம், பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான பிரதேச பாவனையாளர்சங்கம் ஆகியவற்றின் தலைவரான திரு. பொ. சங்கரப்பிள்ளை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர்உடையார்கட்டு கனிஷ்ட மகா வித்தியாலய அதிபருமாவார். (கு)

# சிவகுருநாதனுக்கு யாழ்.நகரில் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 'தினகரன்' பிரதம ஆசிரியரும், சட்டக் கல்லூரி விரிவுரையாளருமான திரு. இ. சிவகுருநாதனுச்கு, இலங்கைப் பத்திரிகை எழுத்தாளர் இயக்கம் யாழ். நகர மண்டபத்தில் பாராட்டுவிழா வென்றை நடத்த விருக்கின்றது.

இப்பாராட்டுவிழா எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும்.

மதப்பெரியார்களின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில்; யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, திரு. இ. சிவகுருநாதனுக்குப் பொன்னுடை போர்த்திக கௌரவிப்பார்.

யாழ். மாநகர முதல்வர், மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர், பாராளுமன் உறுப்பினர்கள் உட்பட பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தோரும், பிரபல எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும், இப் பாராட்டுவிழாவில் சிறப்புரையாற்றுவார்கள். (கி)

## சதாவதானி அறிவுப் போட்டி

(புலோலி)

சதாவதானி கதிரவேற்பிள்ளையின் குருபூசை தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே பேச்சு, பொது அறிவுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளையும் மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய செயலாளர் திரு. கே. தங்கராசா மேற்கொண்டுள்ளார். வடமராட்சிப் பகுதி மாணவர்களுக்கிடையே நடத்தப்படவுள்ள இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் நிலையச் செயலாளருடன் தொடர்பு கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.



(யாழ்ப்பாணம்)

இருபாலை கிராமோதய சபைத் தலைவராக திரு. இ. வேலாயுதர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத்தின் தலைவராகப் பணியாற்றும் இவர் வலி.கிழ. தென் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கக் கோப்பாய்க் கிளையின் உப தலைவரும், நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் பரிபாலன சபையின் உபதலைவரும், கோப்பாய் தென்கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் நிர்வாக உறுப்பினரும் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் உபதலைவரும் ஆவர்.

## காந்தி இல்லம் சாம்பியன்

(அரியாலை)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணன் சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டியை முன்னிட்டு நடாத்திய தாச்சிச்சுற்றுப் போட்டியில் காந்தி இல்லம் சாம்பியனுகியது.

அண்ணு இல்லத்திற்கும், பாரதி இல்லத்திற்குமிடையே நடைபெற்ற போட்டியில் 16:6 என்ற புள்ளிகளால் அண்ணு இல்லம் வெற்றிபெற்றது. காந்திஇல்லமும், அண்ணு இல்லமும் கலந்து கொண்ட இறுதிப்போட்டியில், காந்தி இல்லம் 9:5 என்ற புள்ளிகளால் வெற்றி பெற்றுச் சாம்பியனுகியது. போட்டிகளுக்கு திருக. கிருஷ்ணராசா மத்தியஸ்தம் வகித்தார்.

## தவக்கால நற்சிந்தனை



பணிவிடை பெறுவதற்கன்று பணிவிடைபுரியவே வந்தேன் என்றதன் போதனையை சீடர்களின் பாதங்களைக் கழுவிப் பணிந்து சாதனையாக்குகிறுர். சீடன் குருவிற்கு மேற்பட்டவனல்ல. சீடர்குருவிற்கு செய்யவேண்டியதை குருசீடருக்கு செய்கிறுர். இதன் மூலம் பணிவும் சேவையும், சொல்லளவில் மட்டும் நில்லாது செயலிலும் மிளிர வேண்டும் என்பதை சொல்லாமல் சொல்லுகிறுர். அன்பின் அடையாளம் சேவை எமக்கு பிறரின் அன்பிருந்தால் அது சேவையில் பிரதிபலிக்க வேண்டும். நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல் நீங்களும் ஒருவருக்கொருவர் சேவை அன்பு செய்யுங்கள். நான் உங்களுக்கு சேவை செய்தது போல் நீங்களும் ஒருவருக்கொருவர் சேவை செய்யுங்கள், அப்போ நீங்கள் சொல்லில் மட்டுல்ல செயலிலும் வாழ்வீர்கள்.

— அருட் செல்வன் ரூபன்

பரி. யோவான்


## ஆசிரியர்களை மாணவர்கள் வென்றனர்

(அரியாலை)

யாழ். பரியோவான் கல்லூரி மாணவர்தலைவர்கள கோஷ்டிக்கும், ஆசிரியர் கோஷ்டிக்கு மிடையே நடைபெற்ற 20 ஓவர் கிரிக்கட்போட்டியில் மாணவர்கள் கோஷ்டி 2 விக்கட்டுகளாலும், 6 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய மாணவர் தலைவர் கோஷ்டி 19.6 ஓவரில் 7 விக்கட்டுகளை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றுத்தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இக்கோஷ்டியைச்சேர்ந்த துஷ்யந்தன், ஜெயதர்மன், சினல் ஆகியோர் முறையே 15, 15, 17ஓட்டங்களையும் விசுவலிங்கம் வெளியேறுமலே 21 ஓட்டங்களையும் பெற்றுர். ஆசிரியர் கோஷ்டியைச்சேர்ந்த புஷ்பராசா 20 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினுர்.

அதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஆசிரியர் கோஷ்டி 20 ஓவர்களில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. இக் கோஷ்டியைச் சேர்ந்த தேவதாசன், தனபாலன், சண்முகலிங்கம் ஆகியோர் முறையே 29, 09, 07 ஓட்டங்களை பெற்றனர். (அ)



உரும்பராய் இந்துக்கல்லூரி அபிவிருத்திசபையின் ஆதரவில் நடைபெற்ற கலைவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பொறியியலாளர் திரு. எஸ். கே. மனோகரரூபன் குத்துவிளக்கேற்றி கலைவிழாவை ஆரம்பித்து வைப்பதையும், சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் எம். பி. திரு, மு. ஆலாலசுந்தரம் உரையாற்றுவதையும், அருகில் கல்லூரி அதிபர் திரு. இ. சிவானந்தனையும் இங்கு காணலாம்.

# "தமிழினத்தைக் கூறுபோடுவதற்கு சக்திமிக்க கருவியாக தீண்டாமையை பாவித்தனர்"

## சுதந்திரக் கட்சி, ஐ. தே. க. அரசுகள் பற்றி இராசலிங்கம் எம். பி.

(கரவெட்டி)

''தேசிய சிறுபான்மைஇனத்தைச் சேர்ந்த எந்த ஒரு சமூகமும் தனித்து நின்று அதன் உரிமைகளைப் பெற்றுவிடமுடியாது. சமூக உரிமை கோருகின்ற பின்தங்கிய சமுதாயங்கள் தமிழினத்தின் விடுதலை இயக்கமாகிய கூட்டணியோடு சேர்ந்து அதன் ஓர் அம்சமாக அமைந்து தட்டிக்கேட்கவேண்டிய அரசியல் பலத்தோடு தம்மை மாற்றிஅமைக்கவேண்டியது அவசியமானது''.

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் கம்பர் மலை கலாவாணி சனசமூக நிலைய வெள்ளிவிழாவிலும், விளையாட்டுப் போட்டியிலும் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. துளசிதாசன் தலைமையில் நடைபெற்றஇவ்விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு. த இராசலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இங்கு இக் கலாமன்றத்தின் சேவையைப் பாராட்டுகின்றபொழுதுபலரும் வடபகுதியிலுள்ள உரிமை குறைந்த மக்களுடைய வாழ்விற்கும், வளர்திற்கும் இடதுசாரிக் கட்சிகள் மட்டுமே அளப்பரிய சேவையாற்றி வந்தன என்பதை ஆணித்தரமாகக் குறிப்பிட்டனர். அதே நேரத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள், இயக்கங்கள் இத்துறையில் தமது கடமையைச் செய்யத் தவறிவிட்டன என்றும்சுட்டிக் காட்டினர்.

வடபிரதேசத்தில் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக இடதுசாரி இயக்கங்கள் காலத்திற்குகாலம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஆனால் அதேவேளையில் தமிழ் அரசியல் இயக்கங்கள் சிறப்பாக தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி இத்துறையில் சமூகக் குறைபாடுகளை அரசியல் உரிமைகளோடு இணைத்து மேற்கொண்ட நடவடிக்கைகளை முற்றாகப் புறக்கணிக்க முடியாது.

''சமூகமோ சமுதாயமோ விடுதலை அடைய வேண்டுமானால் கல்வி, பொருளாதாரத் துறையில் மேம்பாடுபெற்று அத்தோடு அரசியல் ஆதிக்கத்தைப் பெற்றுகட்டுக்கோப்பான அமைப்பு முறையின்கீழ் இயங்கவேண்டியது இன்றியமையாதது. ஆனால் கடந்த கால வரலாறு சிலருடைய அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்காக சமூகப் பிரச்னைகள் உபயோகிக்கப்பட்டது என்பதைச் சுட்டிக் காட்டவும் வேண்டியுள்ளது.

### யார் ஆட்சிக்கு வந்தாலும்....

''ஆட்சியாளரைப் பொறுத்தமட்டில் இந்த நாட்டின் இன்றைய அரசியல் அமைப்பைப்பார்க்கும்போது எந்தக் கட்டத்திலும்சிங்களப் பெரும்பான்மை இனத்தின் கைகளிலே தான் அரசியல் ஆதிக்கம் இருக்கும் என்பதை மறுக்கமுடியாது. அவர்கள் இடதுசாரி இயக்கங்களோடு இணைந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியாகவோ அல்லது யு என். பியாகவோ இருக்கலாம். இவை இரண்டும் தமிழ் மக்கள் மத்தியில் அமைந்துள்ள புரையோடிக் கிடக்கின்ற தீண்டாமை என்னும் வேண்டாமையை ஒரு சக்திமிக்க கருவியாகப் பாவித்து தமிழ்இனத்தைக் கூறுபோட முனைந்ததேயல்லாமல் தமிழ் இன ஒற்றுமையைச் சிதைத்துச் சின்னபின்னமாக்க முனைந்ததேயல்லாமல் உரிமை குறைந்த சமுதாயங்களுக்கு பொருளாதாரத்துறையிலோ, கல்வித்துறையிலோ வேலைவாய்ப்புத்துறையிலோ சமூகத்துறையிலோ, பிரத்தியேகமான சலுகைகளை மேற்கொள்ளவில்லை என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்த முறையில் இன்று தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினை ஒரு சிறுபான்மை இனத்தின் தேசியப் பொதுப் பிரச்சினை இந்தத் தமிழ் இனத்திற்குள் பல சமூகங்கள் உள்ளன. இச் சமூகங்களுள் உரிமைகள் மறுக்கப்பட்டு சில சமுதாயங்கள் உள்ளன. இச் சமுதாயங்களின் நலன் கருதி இன்று தமிழ் இனத்தின் மத்தியில் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டி ஒரே இயக்கமாகத் திகழும் தமிழர் விடுதலைக்கூட்டணி இக்குறைபாடுகளை அகற்ற வேண்டுமென சட்டமன்றத்தில் சமூகக் குறைபாடு சட்டத்தினை கொண்டு வந்தது செனற்சபையில் பிரதிநிதித்துவம் வழங்கியது. மாவட்ட அபிவிருத்திச்சபையில் பிரதிநிதித்துவம் வழங்கியது. கூட்டணியின் அடிப்படைக் கொள்கையில், தீண்டாமை ஒழிப்பு முக்கியமான ஒரு அம்சமெனப் பிரகடனப்படுத்தியது. எனவே ஒரு தேசிய சிறுபான்மைஇனத்தின் பிரச்சினைகளுக்கு விடிவுகாண முயற்சிக்கின்றபொழுது அத் தேசிய சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த எந்த ஒரு சமூகமும் தனித்துநின்று அதன் சமூக உரிமைகளைப் பெற்றுவிட முடியாது. பிரித்தாளும் ஆட்சியாளரின் ஆட்சிக்குள் அகப்பட்டுப் பலியாகிவிடும்.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், கலாநிதி கே. சிவத்தம்பி, இக்பால் உட்பட பலர் பேசினர்கள். (அ)

# மீண்டும் கழிவுக் கடதாசி: கூட்டுத்தாபனம் கோருகிறது

(கொழும்பு)

தேவையற்ற கழிவுக் கடதாசிகளைச் சேகரித்துத் தருமாறு இலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனம் நாட்டின் மாவட்ட, கிராம, நகர்ப்பகுதிகளிலுள்ள சகல அரசாங்கத் திணைக்களங்களையும் கோரியுள்ளது.

கழிவுக் கடதாசிகளைச் சேகரித்துத் தரும்படி கடதாசிக் கூட்டுத்தாபனம் சகல அரசாங்கத் திணைக்களங்களையும் கோரியிருப்பதுடன், சேகரித்தவற்றை நிரப்புவதற்கு சாக்குகளையும் தந்துதவமுன்வந்துள்ளது.

கழிவுக்கடதாசிகள் மீண்டும் கடதாசிகளை உற்பத்தி செய்வதற்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுமென்றும், இவ்வாறு செய்வதன் மூலம் கடதாசிகளைத் தயாரிப்பதற்குச் செலவாகும் அந்நிய செலாவணியைக் குறைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

கழிவுக் கடதாசிகளை கொள்வனவுசெய்ய முகவர்நிலையங்கள் எதனையும் தாம் அமைக்கவில்லையென்றும், ஒரு மெட்றிக்தொன் கழிவுக்கடதாசிக்கு 550 ரூபா வழங்கப்படுமெனவும் கடதாசிக்கூட்டுத்தாபனம் மேலும் அறிவித்துள்ளது. (கி)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு மாத [illegible] அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. A.யோகானந்தா, தபால் நிலைய வீதி, சாவகச்சேரி. 2789

## விற்பனைக்கு

காங்கேசன்துறைச் சந்திக்கும் புதிய துறைமுகத்திற்கும் இடையில் கீரிமலை பிரதான வீதியில் 2 பரப்புக் காணியுடன் 6 அறைகளும், கராச்சும் கொண்ட வீடு, நல்ல தண்ணீர், மின்சார வசதியுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்; ஜோதிமகால், கீரிமலை வீதி, காங்கேசன்துறை. 2775

## தொலைக்காட்சியில் தமிழ்ப்படம்

(கொழும்பு)

தொலைக்காட்சி சேவையில் தமிழ் திரைப்படம் காட்டும் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இனிமேல் ஒவ்வொரு புதன்கிழமையும் இரவு 8-45 மணிக்குதமிழ்படம் ஆரம்பமாகும்.

நேற்று போயா தினமாதலால் தமிழ்ப்படம் காட்டப்படவில்லை. அடுத்த புதன்கிழமை பத்தாண்டு தினத்தில் தமிழ்ப்படம் காண்பிக்கப்படும்.

## ஆங்கிலக் கல்வி

நவீன உலகத்தினுட் பிரவேசிக்க ஒரேஒரு திறவுகோல் ஆங்கில அறிவேயாகும். இதை எல்லோருக்கும் உகந்த இலகுவானமுறையில் உச்சரிப்புகளுடனும் மொழிபெயர்ப்புகளுடனும் கற்பிக்கின்ற ஒரே ஒரு தமிழ்வார இதழ் 'விளக்கமான ஆங்கிலம்'. எங்கும் கிடைக்கும். விலை 2/25. ஆங்கிலம் பிரசுரிப்பாளர்கள், த. பெ. 23, கண்டி. 2520

## நூலகத்தை...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ரது கணவரும் அவரது குடும்பத்தாரும் யாழ். பொதுசன நூல்நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கினர்.

விஞ்ஞான, வைத்திய துறை மாணவர்களுக்கான சிறந்த பெறுமதியான நூல்களை திரு. தர்மராசா தனது மனைவியின் ஞாபகார்த்தமாகயாழ்ப்பாண மாநகர உதவி முதல்வருடம் கையளித்தார். நூல்களைப் பெற்றுக்கொண்ட துணைமுதல்வர் திரு. அலோசியஸ் நன்றி தெரிவித்துப் பேசினார். மற்றும் நல்லூர் ஆனந்தவித்தியாலய அதிபர் திரு. என். இராமலிங்கம், மாதர்சங்கத்தலைவி திருமதி செல்லத்தம்பி இரத்தினேஸ்வரி, செல்வி மீரா சிவபாக்கியம், நிலையச்செயலாளர் திரு. இ. அரசகேசரி ஆகியோரும் பேசினார்கள். (அ)

## ஏல விற்பனவு

யாழ்ப்பாணம்,222, கே.கே. எஸ். றோட், திருமதி ச. பரமு அவர்களிடம் 28—9—1978 தொடக்கம் 31—3—1981 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 28—4—1982 புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**வ. சி. மகாதேவன்**
ஏல விற்பனையாளர்

கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 2769

## கம்பர்மலையில் உபதபாலகம்

(கரவெட்டி)

கம்பர்மலையில் உபதபாற்கந்தோர் ஒன்று திறந்துவைக்கப்படவுள்ளது. உடுப்பிட்டி எம். பி. [illegible] திரு. த. இராசலிங்கத்தின் முயற்சியைத் தொடர்ந்தே இத் தபாற்கந்தோர் திறந்துவைக்கப்படுகிறது.


## அரிய சந்தர்ப்பம்

உங்கள் பணத்தை இலாபகரமான வழியில் முதலீடு செய்ய விரும்புகின்றீர்களா? உடனே ஒருவீட்டையோ, வீட்டு நிலத்தையோ அன்றி ஒரு தோட்டத்தையோ வாங்கிவிடுங்கள். ஒரு வருடத்தின் பின் உங்கள் பணத்தின் பெறுமதி பன்மடங்காக உயர்ந்திருப்பதைக் காண்பீர்கள். இது சம்பந்தமாக உங்களிற்குத் தேவையான சகல உதவிகளையும், ஆலோசனைகளையும் தரக் காத்திருக்கின்றார்கள். "த பினான்ஸ் கொம்பனியினர்."

வடபகுதியில் எப்பகுதியிலாவது வீட்டு நிலங்களோ, காணிகளோ, தோட்டங்களோ தேவைப்படின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

மேற்குறிப்பிடப்பட்டவற்றை வாங்கிக் கொள்ளப் போதிய பணவசதி இல்லையா? எம்முடன் கலந்தாலோசியுங்கள்.

நீங்கள் தவறாது தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

திட்ட அதிகாரி:—

தோட்டக் காணிப்பிரிவுப் பகுதி

**த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்**

249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 7680.

# ஏவுகணைபரிசோதனைக்கு கனடாவில் எதிர்ப்பு!

ஒட்டாவா, ஏப். 7

அணுஆயுதங்களை செலுத்தக்கூடிய குறூஸ் ஏவுகணைகளை கனடாவில் பரீட்சிக்க அமெரிக்காதிட்டமிட்டுள்ளது. இதுசம்பந்தமாக அமெரிக்க—கனேடிய பேச்சுவார்த்தை வாஷிங்டனில் நடைபெறுகிறது.

அதேநேரத்தில் கனடா மண்ணில் ஏவுகணை பரிசோதனைக்கு இங்குள்ள அரசியல் வட்டாரங்களில் பரபரப்பும் ஆத்திரமும் ஏற்பட்டுள்ளது. அமெரிக்க சார்பு பத்திரிகைகள்கூட, ''கனேடியதேசியநலன்களுக்கு இதுஅனுகூலமானவை அல்ல'' என்று எழுதியுள்ளன.

இத்திட்டத்துக்கு கனடா சம்மதிக்கப்போவதில்லை என்று அரசாங்கம் முன்னர் பல தடவைகள் கூறியிருந்தது. அதனுடன் பிரதமர் ட்ரூடோ அணுவாயுதங்களை முற்றுக ஒழித்துவிடுவது பற்றியும் கருத்து தெரிவித்திருந்தார்.

கனடா—அமெரிக்க பேச்சுவார்த்தையை எதிர்த்து டொரோண்டோ நகரிலுள்ள அமெரிக்கதூதரககந்தோருக்கு முன்னுல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பல நகரங்களிலும்எதிர்ப்புஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

## இப்படியும் நடக்கிறது

லண்டன் பி, பி! சி. 'தமிழோசை' பற்றிக் கூறத் தேவையில்லை. வீட்டுக்கு வீடு கேட்கின்றுர்கள்.

இது மாதிரி, இப்பொழுது பிலிப்பைன்ஸ், ஜெர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் ரசிகர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் தமிழ் (வாஞெலி) நிகழ்ச்சிகள் அதிகமாக ஒலி பரப்பப்படுகின்றன.

இத்தொடரில் இப்பொழுது கனடா வாஞெலியிலும் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் ஒரு மணி நேரத் தமிழ் நிகழ்ச்சி இடப்பெறுகிறது.

நிகழ்ச்சியைத் தயாரித்து ஒலிபரப்புபவர் யார் தெரியுமா?

இலங்கை வாஞெலியின் தமிழ் வர்த்தக ஒலிபரப்புச் சேவையின் தந்தை (றேடியோ சிலோன்) மயில்வாகனம் அவர்கள்தான்!

'ஊடுருவி'

### சிவபூதவராயர் ஆலய மகாகும்பாபிஷேகம்

(தெல்லிப்பளை)

பன்னுலை சிவபூதவராயர் ஆலய புனராவர்த்தன. மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

இன்று காலை யாகபூஜையும் அதனைத்தொடர்ந்து திருவீதியுலாவும் காலை 10.30 மணிக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

# கூட்டணி மேதின ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணி தொழிற்சங்கங்களின் மேதின ஆலோசனைக்கூட்டம் இம்மாதம் 10ம் திகதி மாலை கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் இல்லத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட எம். பிக்கள், மாவட்ட அபிவிருத்திசபை மாநகர சபை, நகரசபை உறுப்பினர்கள், கட்சி அமைப்பாளர்கள் தொழிற்சங்க உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொள்வார்கள். (மா)

### நியசக்திகளுக்கு.,.

(1ம் பக்கத் தொடார்ச்சி)

ஜனப் ஜகுபர் உட்பட பலர் அவரது இல்லத்திலிருந்து நஸீரை ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

திரு.அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் ''தமிழ் பேசும் மக்கள் சமூகரீதியிலோ மதரீதியிலோ பிரிந்திருந்தாலும், இனரீதியில் பிளவுபட்டிருக்க ஒருபோதும் இடமளிக்கக்கூடாது இடமளிக்கவிடவும் மாட்டோம்'' என்று வலியுறுத்தினுர்,

''ஜனுப் நஸீர் ஈட்டும் சாதனைகள் அவருக்கு மட்டுமல்ல இலங்கையிலுள்ள சகல தமிழ் பேசும் மக்களுக்கும் உரிய வெற்றியாகும் ஆதலால் அவரது முயற்சிகளுக்கு முழு ஊக்கமுய ஆக்கமும் கொடுக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும் என்றும் கூறிய திரு. அமிர்தலிங்கம் நஸீரின் 6 — வது சாதனையும் வெற்றியளிக்க வேண்டுமென்று வாழ்த்தினுர்.

ஜனுப் எம். எஸ். அபானுல்லா வரவேற்புரை நிகழ்த்துகையில் ஜனுப் நஸீர் நிகழ்த்திய உலக சாதனைகளை ஆரம்பித்துவைத்தவர்கள் தமிழ்த் தலைவர்கள். தமிழ்—முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டுச் சகோதரர்களாக வாழவேண்டும் என்பதற்காகவே இம்முயற்சியை மேற்கொண்டுவருகின்றேும்'' என்றுர்.

## அநுரா-மைத்திரி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்குப் பதிலாக 10 உறுப்பினர்கள் புதிதாக மத்திய சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

### அநுரா கருத்து

இக்கூட்டத்தில் கட்சியின் தலைவராக திரு. மைத்திரிபாலசேன நாயக்காவும் பிரதித்தலைவராக, திரு. பி. பி. ஜி. கலுகல்லயும், பொதுச் செயலாளராக திரு. கே. சூரியராய்ச்சியும் நியமிக்கப்பட்டனர். அதே நேரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மைத்திரிபிரிவின் மத்தியசபை உறுப்பினர் பதவியிலிருந்து தாம் இடைநிறுத்திவைக்கப்பட்டது தொடர்பாக எந்த விதமான அறிவித்தலும் திரு. மைத்திரிபால சேனநாயக்காவிடமிருந்தோ அல்லது திரு. சூரியராச்சியிடமிருந்தோ தமக்கு கிடைக்கவில்லை யென்று திரு.அநுராபண்டார நாயக்கா தெரிவித்துள்ளார்.

### மைத்திரி குழுவில் குமாரசூரியர்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மைத்திரி அணியினர் நேற்று முன்தினம் நடத்திய செயற்குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட அரசியல் குழுவில், முன்னுள் தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரும் இடம்பெற்றுள்ளார்.

### மைத்திரி குற்றச்சாட்டு

இக்கூட்டத்தின் பின்னர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில், மக்களையும், கட்சியையும் திரு. அநுரா பண்டாரநாயக்கா காட்டிக் கொடுத்துவிட்டார் என்றும் மக்கள் தமது பக்கம்தான் இருக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

### அநுரா மாநாடு

திரு. அநுரா பண்டாரநாயக்கா நேற்றுக் காலை றேஸ்மெட் பிளேஸிலுள்ள தமது வீட்டில் தனது பிரிவிலுள்ள அரசியல்குழு அங்கத்தவர்களை அழைத்துக் கூட்டம் நடத்தினுர்

இச்செயற்குழுக்கூட்டத்தில் திரு. மைத்திரிபால சேனநாயக்காவையும் அவரது அரசியல் குழுவினரையும் கட்சியிலிருந்து இடைநிறுத்தம்செய்வதாக முடிவுசெய்யப்பட்டது.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து செய்தியாளர் மகாநாட்டை திரு. அநுரா பண்டாரநாயக்கா நடத்தினுர்.

பதினேழு அங்கத்தவர்களைக்கொண்ட அரசியல்குழுவில் பத்துப்பேர் தமது அணியில் இருப்பதாகவும், ஏழுபேர் மட்டும்தான் திரு. மைத்திரிபால சேனநாயக்கா அணியிலுள்ளனர் என்றும் இவர்களுக்குப்பதிலாகப் புதிய அங்கததவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள் என்றும் கூறினுர்.

திரு, மைத்திரிபால சேனநாயக்கா மீது வழக்குத்தொடர்வது சம்பந்தமாக சட்டவல்லுநர்களின் ஆலோசனையைத் தாம் பெறவுள்ளதாகவும் திரு. அநுரா பண்டாரநாயக்கா நேற்றுத் தெரிவித்துள்ளார்,

திரு. அநுரா பண்டாரநாயக்கா அணியின் முக்கிய செயற்குழுக்கூட்டம் இன்று ஹொரகொல்லையில் நடைபெறுகிறது.

இந்தநிலையில்அநுரா—மைத்திரி அணிகளில் தோன்றியுள்ள உட்பூசல்களின் எதிரொலி, அடுத்த வாரத்தில் தெரிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழோசை நிகழ்ச்சியில் ஹோமரின் 'இலியாத்'

லண்டன், ஏப் 7

மகாகவி ஹோமர் இயற்றிய 'இலியாத்' காவியததை அடிப்படையாகக் கொண்டு நாடகத் தொடர் ஒன்றை (பி. பி சி) தமிழோசையில் தமிழோசை தயாரிப்பாளர் சங்கர மூர்த்தி சங்கர் வழங்குகிறுர்.

இந்த நாடகத் தொடரில் சங்கருடன் தமிழோசையில் பங்கேற்றுவரும் ஆனந்தி, விமல் சொககநாதன், கீதா, சிங்கப்பூர்பாலா ஆகியோருடன் முன்னுள் தயாரிப்பாளர் திரு. சிவபாதசுந்தரமும் மற்றும் லண்டன் வாழ் தமிழ் அன்பர்கள் சிலரும் நடிக்கிறுர்கள்.

கி. மு. எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஹோமர் இயற்றிய காவியம் இலியாத் பண்டைய கிரேக்கர்களுக்கும் ட்ரோஜன் மக்களுக்கும் இடையே பேரழகி ஹெலன் என்பாளை முன்னிட்டு நடந்த போரைச் சித்திரிக்கிறது இந்தக் காவியம்.

இம்மாதம் 17—ம் திகதியிலிருந்து சனிக்கிழமைகள் தோறும் இந்நாடகத் தொடர் ஒலிபரப்பாகும். இந்திய இலங்கை நேரப்படி இரவு 9—45 மணியிலிருந்து 10—45 வரை ஒலிபரப்பாகும் தமிழோசையில் இந்நாடகத்தை நேயர்கள் கேட்கலாம்.

### ஆர்ஜன்டீனு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரப்பட வேண்டும் என்றும் பிரதமமந்திரி திருமதி மாகரட் தட்சர் தெரிவித்துள்ளார். (வெ)

## புதிய பாராளுமன்றவளவில் தபால்நிலையம்

(கொழும்பு)

கோட்டே ஸ்ரீஜெயவர்த்தனபுர புதிய பாராளுமன்றவளவில் தபால்நிலையம் ஒன்று திறக்கப்படவிருக்கிறது. இத்தபால் நிலையத்தில் டெல்கஸ் வசதிகளும் செய்யப்படும். (க)


# ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்

**மக்கள் எதிர்பார்த்திருந்த புதிய உல்லாச பஸ் சேவை**

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பிஞன்ஸ் லிமிட்
இல: 82,1 கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 370—438—537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி.
தொலைபேசி இல; 273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்

(1) ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஏப்பிரல் மீ 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. at the General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 77 07, 889, 8185.